அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: 04/2013

எனது இலக்கம்: EST/7/LEAVE/03/3186
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.

2013 பெப்ரவரி மாதம் 14 திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

<u>பட்டதாரிப் பயிலுநர்களுக்கு விடுமுறைகளைப் பெற்றுக் கொடுத்தல்</u>.

தரவுகள் மற்றும் தகவல்களைச் சேகரித்தல், முன்னுரிமை அடிப்படையில் கருத்திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் இனங் காணல் போன்ற செயற்பாடுகளுக்காக 2011.12.14 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி இணைத்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களுக்கு கீழ் வருமாறு விடுமுறை வழங்குவதற்கு 2012.12.19 ஆந்திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

I. ஒன்பது மாத (09) பயிற்சிக் காலத்தை பூர்த்தி செய்துள்ள பட்டதாரிப் பயிலுநர்களுக்கு மாதம் ஒன்றிற்கு இரண்டு (02) அமய விடுமுறைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

II. ஒன்பது மாத (09) பயிற்சிக் காலத்தை பூர்த்தி செய்துள்ள பெண் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு எண்பத்தி நான்கு நாட்கள் (84) முழு வேதனத்துடன் கூடிய பிரசவ விடுமுறையினைப் பெற்றுக் கொடுத்தல்.

02. அதற்கமைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தங்களுக்குக் கீழுள்ள சகல தாபனங்களுக்கும் அறியத் தருமாறும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம். பி.பீ. அபேகோன்
செயலாளர்
பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.